6026

# சைவப்பிரகாசிகை

## நான்காம் புத்தகம்

சமயபாடத்துக்காக

இலங்கை அரசினர்

வித்தியாபிரசுர சபையாரின்

அங்கீகாரம் பெற்றது.

GF
R673x1:g
J7·4

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## (நான்காம் புத்தகம்)

*

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மானேசர்

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்

எழுதியது.

*


சென்னை

வித்தியாநுபாலன அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

ஐந்தாம் பதிப்பு 1953
ஆறும்பதிப்பு 1957.

வித்தியாநுபாலன அச்சகம்,
300, தங்கசாலைத் தெரு, சென்னை.



சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்.

உ

# அணிந்துரை

பிரபல நியாயதுரந்தரரும்
சைவ வித்தியாவிருத்திச்சங்க மானேஜருமாகிய
**ஸ்ரீமான்: சு. இராசரத்தினம் அவர்கள்**
எழுதியது.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் இடையறா முயற்சியின் பயனாக இப்பொழுது சைவப் பிரகாசிகை நான்காம் புத்தகம் வெளிவந்திருக்கிறது. இப்புத்தகத்தில் உள்ள பாடங்களெல்லாம் சைவசமய சம்பிரதாயங்களையே அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டவைகள்; அன்றி, சிறுவர்கள் இளைப்படையாது படித்தற்கேற்றவாறு அளவாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாற்றால் இப்புத்தகம் சைவ வித்தியாசாலைகளிற் கல்விபயிலும் மாணவர்களுக்கு வேண்டப்படுவதொன்று என்பது சொல்லாமலே அமையும். இதன் சிறப்புக்களை இனி இதற்குமேல் எடுத்துச் சொல்வது மிகை. குருக்கள் அவர்கள் நூலியற்றுந் திறமைகளை மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலிய வடதேசத்துப் பழுத்த வித்துவான்களே பலவாறு பாராட்டியிருக்கின்றார்கள்.

சைவவித்தியா விருத்திச் சங்கம்.
13—6—39.

**சு. இராசரத்தினம்.**

அரசாங்க சபைப்பிரதிநிதி

## ஸ்ரீமான்: சு. நடேசபிள்ளை அவர்கள் B.A.

எழுதியது.

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் சைவப் பிரகாசிகை என்று மகுடமிட்டெழுதிய ஐந்து புத்தகங்களும் பயன்தரக்கூடிய சிறந்த நூல்களாகும். சைவசமய உண்மைகளும் புராண சரிதங்களும் இந்நூல்களில் மிகத்தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளன.

சமயபாட புத்தகங்களாகவும் கதாவாசக புத்தகங்களாகவும் இந்நூல்கள் ஒருங்கே அமைந்திருத்தல் மிகவும் பாராட்டப்படத்தக்கது. பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சரிதங்கள் மூலியமாய்ச் சமய உண்மைகளை உணர்த்துவது சிறந்த முறையாதலால் இந்நூல்களைத் தமிழாசிரியர்கள் எல்லாரும் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னுகம்.
13—7—36.

சு. நடேசபிள்ளை.

வித்தியாதரிசகர்

## ஸ்ரீமத். சே. தியாகராசா அவர்கள்

எழுதியது.

சைவசமயத்தினை விளக்கி ஆன்றோரியற்றிய பலநூல்களுளவேனும் இளம்பருவச்சிறார் எளிதில் அந்நூல்களை விளங்கமாட்டாராதலின் சைவசமய உண்மைகளை விளக்கி இத்தகைய நூல்களியற்றப்படவேண்டியது ஆவசியகம். சைவப்பிரகாசிகை என்னுமிந்நூல் சைவசமய உண்மைகளை மாணவர்கள் எளிதில் நன்குணர்வதற்கு ஏற்றமுறையிலும் இனிய தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலினைக் கற்கும் சிறார் இருவகையில் அறிவு வளர்ச்சியினைப் பெறுவர்; சமய அறிவினைப் பெறுதல் ஒன்று; இலக்கிய அறிவினைப் பெறுதல் மற்றொன்றாகும். இந்நூலினை ஆக்கியவர் பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களாவர். இவர் தமிழபிமானமும் சைவப்பற்றும் ஆழ்ந்த சமயஞானமும் பெரிதுமுடையவர். இந்நூலினை ஆக்கி இவர் தமிழுலகிற்களித்துதவியதே இவரது சைவப்பற்றினை யாவருக்கும் புலப்படுத்துகின்றது.


இதனைக் கதாவாசகப் புத்தகமாகவும் சமயநூலாகவும் பாடசாலைகளிற் பயன்படுத்திக் குருக்களவர்களை இத்தொண்டில் மேன்மேலும் ஊக்கப்படுத்துதல் சைவமக்களது பெருங் கடனாகும்.

தெல்லிப்பழை.<br>22—6—36.

சே. தியாகராசா,<br>வித்தியாதரிசகர்.

# பொருளடக்கம்


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | விநாயகக்கடவுள் | 1 |
| 2. | மட்டுவிற் சிவன்கோயில் | 3 |
| 3. | மாவிட்டபுரம் | 5 |
| 4. | சுசங்கீதன் | 8 |
| 5. | இராவணன் கோணேசரிடம் சிவலிங்கம் பெற்றது | 10 |
| 6. | சிவபுராணங்கேட்டல் | 12 |
| 7. | திருநந்தன வனம் வைத்தல் | 14 |
| 8. | மார்க்கண்டேய முனிவர் | 15 |
| 9. | சைவ சமய குரவர் | 18 |
| 10. | திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் | 19 |
| 11. | திருநாவுக்கரசு நாயனர் | 21 |
| 12. | சுந்தரமூர்த்தி நாயனர் | 22 |
| 13. | திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் படிக்காசுபெற்றது | 24 |
| 14 | பராசரமுனி குமாரர் | 26 |
| 15. | அகத்திய முனிவர் | 27 |
| 16. | ஆலய தரிசனம் | 31 |
| 17. | சிவபெருமான் தாயினும் நல்லவர் | 34 |
| 18. | பழநி | 39 |
| 19. | ஆப்பு சிவலிங்கமானது | 41 |
| 20. | சங்கர பண்டிதர் | 45 |



சிவமயம்

# சைவப்பிரகாசிகை

## நான்காம் புத்தகம்

### 1. விநாயகக்கடவுள்.

விட்டுணுமூர்த்தியானவர் சிவத்தியானத்துடன் பாற்கடலில் அறிதுயில் செய்தருளுகின்றார். அவர் அறிதுயில் செய்யும் திருப்பாற் சமுத்திரத்தில் அமிர்தம் உண்டு. அதனை உண்போர் நரை திரை யின்றி நெடுங்காலத்துக்கு உயிரோடிருப்பர். தேவர்களும் அவுணர்களும் அதனை எடுத்து உண்டு இறவாமல் இருக்க விரும்பினார்கள்.

அவ்வாறு விரும்பிய தேவர்களும் அவுணர் களும் அதனைப் பெறுவதற்காக மந்தரமலையாகிய மத்தினால் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். கடையும்பொழுது, மந்தரமாகிய மத்துக் கடலி னுள்ளே தாழ்ந்தது. விட்டுணு ஆமை உருக் கொண்டு அக்கடலுட் போய், மத்தை முதுகினாற் சுமந்தார். அவர்கள் பின்பு கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்றார்கள்.

விட்டுணுவாகிய ஆமை, மந்தரமலையைச் சமுத் திரத்துள் நிறுத்திக் காத்தேன் என்று நினைத்து, பெரிதும் அகந்தையுற்றுச் சமுத்திரங்களிற் போய்,

அலைகளை உழக்கித் திரிந்தது. அதனால் உயிர்களுக்கு அழிவு உண்டாயது. தேவர்கள் விட்டுணுவாகிய ஆமையால் வருந்திக் கைலாசபதிக்கு முறையிட்டார்கள். சிவபெருமான் கிருபை செய்து விட்டுணுவினுடைய அகந்தையை நீக்கிவருமாறு விநாயகக்கடவுளை அனுப்பியருளினர்.

கணேசமூர்த்தி சென்று, எழுகடலையும் தமது துதிக்கையால் அள்ளி உறிஞ்சினர். ஆமையும் உட்சென்றது. பின்னர், உறிஞ்சிய சலத்தை வெளியே சிந்தினர். அந்நீர் முழுவதும் கடலுள் மீண்டு சென்றது. ஆமை நிலத்தில் வீழ்ந்தது. வீழ்ந்த ஆமையை விநாயகக்கடவுள் தமது தந்தத்தாற் குத்தித் தோண்டி ஓட்டைப் பிடுங்கிச் சிவபெருமான் தரித்தருளுமாறு கொடுத்தார்.

அப்பொழுது பிரமா முதலாம் தேவர்கள் எங்கள் துன்பம் நீங்கிற்று என்று கடவுளை வணங்கித் தோத்திரம் செய்தார்கள்.

திருமால் காஞ்சிநகரிற் சென்று சிவபூசை செய்து அகங்காரம் நீங்கிப் புனிதராயினர்.

## 2. மட்டுவிற் சிவன்கோயில்.

பலவருஷங்களுக்கு முன்னே, சோழராசாவின் புத்திரன் ஒருவன் கௌடதேசத்திற்குப் போய்ச், சமஸ்கிருத பாஷையைக் கிரமமாகப் படித்து வந்தான். அவன் படிப்பை முடித்துக்கொண்டு இமயமலையின் தென்பாகத்திலுள்ள திருக்கேதாரம் என்னும் தலத்துக்குப் போய்ச், சுவாமி தரிசனம் செய்துகொண்டிருந்தான். சிலமாசம் அங்கேயிருந்து திரும்பும் பொழுது, மன்மதனாலே பூசிக்கப்பட்ட ஒருசிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். அவன் ஒரு சிறு கோயில் கட்டி அவ்விலிங்கத்தை அங்கே பிரதிட்டை செய்து தரிசனம் பண்ணிவந்தான். அவ்வரசிளங்குமரன் பாண்டியனது நட்புப்பெற்று, அவன்கீழிருந்து வில்வித்தை முதலியவைகளைக் கற்றுக்கொண்டிருந்தான்.

இப்படி அரசகுமாரன் வில்வித்தை பயிலுங் காலத்தில், யாழ்ப்பாணம் அரசன் இல்லாமற் சீரழிந்திருந்தது. திருநெல்வேலியில் இருந்த மழவராசன் என்னும் வேளாளப்பிரபு அதனைக்கண்டு, அவ்வரசகுமாரனை அழைத்துக்கொண்டு வந்தான். அரசகுமாரன் நல்லூரில் ஒரு அரண்மனை கட்டுவித்து, அவ்வூரை ஒரு இராசதானியாக்கி சிங்கையாரியச் சக்கிரவர்த்தி என்னும் பட்டப்பெயரோடு செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்திருந்தான்

இருக்கும் நாளில், அவன் தனது அரண்மனைக்குள்ளே ஒரு கோயில் கட்டுவித்துத், தான்

முன்னரே வழிபட்டுவந்த மன்மத இலிங்கத்தை இங்கே வருவித்து, அக்கோயிலிலே அதனைப் பிரதிட்டை செய்து தரிசனம்பண்ணி வருவானாயி னன். அக்கோயில் கைலாசநாதசுவாமி கோயில் என்று சொல்லப்படும். அச்சிவாலயத்தின் கிழக்கு கோபுரவாயிற் பிள்ளையார் கோயில் இப்பொழுதும் கைலாசநாத பிள்ளையார்கோயில் என்று வழங்கப்படு கின்றது.

சிங்கை ஆரியச்சக்கிரவர்த்தி பலகாலம் நல் லூரில் இருந்து அரசுபுரிந்தான். அவன்மரபிற் பலர் தோன்றி அரசாட்சி செய்தனர். யாழ்ப்பாணம் பறங்கியராற் கைப்பற்றப்பட்டபின் அவர்கள் அந்த ஆரியச்சக்கிரவர்த்தியின் அரண்மனையை இடித்தழிக்கத் தொடங்கினார்கள். தொடங்குவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன், இதனைக் கைலாச நாதசுவாமி கோயிற் குருக்கள் கேள்விப்பட்டார். அவர் மனம்வருந்தி, சிவலிங்கத்தையும் தேவி யாரையும் மட்டுவில் என்னும் தமது ஊருக்குக் கொண்டு செல்ல விரும்பி, வண்டியில் வைத்து இழுத்தார். அது பாரம் மிகுந்து இழுக்கமுடியாமல் இருந்தது. அதனால் அவர் தேவிவிக்கிரகத்தை அக்கோயிற் கிணற்றினுள்ளே இறக்கிவிட்டு, சிவ லிங்கத்தை மாத்திரம் வண்டியில் வைத்து இழுத்துச் சென்றார். அவர் மட்டுவிலை அடைந்தவுடன், புதுப்பிப்பாரின்றிப் பழுதடைந்திருந்த ஒரு சிவன் கோயிற் கிணற்றுக்குள்ளே சிவலிங்கத்தை இறக்கி விட்டுத், தமது வீட்டை அடைந்தார்.

சிலகாலத்தினுள்ளே அக்குருக்கள் தேக வியோகமாயினர். பறங்கியரது அரசாட்சிக் காலமும் ஒழிந்தது. பின் ஒரு நாள் பரமசிவன் சொப்பனத்திலே அனுக்கிரகஞ் செய்த பிரகாரம், அந்த மன்மதலிங்கம்தூர்ந்துபோய் அக்கிணற்றினின்றும் சிவபத்தரும் பிரபுவுமான வன்னியசிங்க முதலியார் என்பவரால் எடுக்கப்பட்டது.

அந்த முதலியார், அவ்விடத்திலேயே ஒரு ஆலயங்கட்டி, சிவலிங்கத்தைச் சந்திர மௌலீசர் என்னும் திருநாமத்தோடும், தேவியைச் சாந்தநாயகி என்னும் திருநாமத்தோடும் சிவாகமவிதிப்படி பிரதிட்டை செய்வித்தார். நித்திய பூசை, திருவிழா முதலியவைகளையும் முறைப்படி செய்வித்து வந்தார்.

மட்டுவிற் சிவன்கோயில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்திபெற்ற சிவாலயங்களுள் ஒன்று.

---

## 3. மாவிட்டபுரம்.

முற்காலத்திலே திசோக்கிரசோழன் என்னும் பெயரையுடைய ஓர் அரசன் இருந்தான். அச்சோழராசனுக்கு, கனகாங்கி என்னும் பெயரையுடைய மனைவியிருந்தாள். அவள் கடவுளுடைய கிருபையினாலே கருப்பவதி ஆயினள். ஒரு நாள் அவள் குதிரை முகத்தையுடைய ஒரு கின்னரப் பெண்ணைக் கண்டாள். கண்டவுடனே அவளுடைய குதிரை முகத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

கின்னரப்பெண் "கனகாங்கியே! உனக்குப் புத்திரி ஒருத்தி பிறப்பாள்; நீ என்னைப் பார்த்துச் சிரித்தமையால் அவள் குதிரைமுகம் உடையவளாவாள். அவளுக்குக் குன்மநோயும் உண்டு" என்றாள். கனகாங்கி "எனது பிழையைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்று வேண்டுதல் செய்தாள். கின்னரப்பெண் "உன்னுடைய புத்திரி கடவுள் கிருபையால் குதிரை முகமும் நோயும் நீங்குவாள்" என்று கூறினாள்.

கனகாங்கி பூரண கருப்பமெய்தி ஒரு பெண் பிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளை கின்னரப் பெண்ணின் சாபப்படி குதிரைமுகம் உடையவளாய் இருந்தாள். பெற்றார் அவளுக்கு மாருதப்பிரவல்லி என்று பெயரிட்டனர். மாருதப்பிரவல்லி குன்ம நோயினால் வருந்தினாள்.

அவள் இந்தியாவில் உள்ள பல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் பலதருமங்கள் செய்தும் சாபம் நீங்கவில்லை. பின்னர் அவள் யாழ்ப்பாணத்தில் உள்ள கீரிமலை என்னும் தலத்தை அடைந்தாள். அப்பதியில் வீற்றிருந்தருளும் நகுலேசுரரை வணங்கி, "அடியேனுடைய குதிரை முகத்தையும் குன்ம நோயையும் நீக்கி யருளுக" என்று பிரார்த்தித்தாள். சிவபெருமான் அவளுடைய கனவிலே தோன்றிக் கிருபை செய்து மறைந்தருளினார்.

மாருதப்பிரவல்லி சிவபெருமானையும் நகுல முனிவரையும் வணங்கிக், கீரிமலையில் இருந்து புறப்

படும் தீர்த்தத்தில் முழுகினள். உடனே அவள் குதிரைமுகம் நீங்கி அழகிய மனித முகத்தைப் பெற்றாள். அவளுக்குக் குன்ம நோயும் நீங்கியது. எல்லோரும் ஆச்சரியம் அடைந்து பரமசிவனைத் துதித்தார்கள்.

மாருதப்பிரவல்லி நகுலேசுரரையும் தீர்த்தத்தையும் பிரியும் கருத்தில்லாதவளாய்க் குதிரைமுகம் நீங்கியமையைத் தனது பிதாவுக்குக் கடிதம் எழுதி அறிவித்தாள். சோழராசன் அதனை வாசித்துச் சந்தோஷமடைந்து, தனது மகள்பேரினல் பல தருமங்களைச் செய்தான். அவன் தனது புத்திரியின் கேள்விப்படி ஆறுமுகசுவாமியினது திருவுருவம் ஒன்றைச் செய்வித்து அவளுக்கு அனுப்பினான். அந்த உருவம் மரக்கலத்தின் வழியாக வந்து சேர்ந்தது. ஆறுமுகசுவாமியினுடைய திருவுருவம் வந்து இறங்கிய காரணத்தினலே அத்துறை காங்கேயன்துறை என்று சொல்லப்படும்.

மாருதப்பிரவல்லி கீரிமலையின் கிழக்குத் திக்கிலே ஒரு திருக்கோயில் கட்டுவித்தாள். அத்திருக்கோயிலில் தன்பிதா அனுப்பிவைத்த திருவுருவத்தைக் குமாரதந்திரம் என்னும் ஆகம முறைப்படி சிவப்பிராமணரைக் கொண்டு பிரதிட்டை செய்வித்தாள். நித்தியபூசை மகோற்சவம் முதலியவற்றையும் கிரமமாகச் செய்வித்து வந்தாள். அவளுடைய சிவபுண்ணியச் செயலைப் பாராட்டாதவர் இல்லை. அவள் சிவபெருமானிடத்திலே அன்புடையவளாய் இருந்து அக்கடவுளுடைய திருவடிகளைச் சேர்ந்தாள்.

மாருதப்பிரவல்லி என்னும் பெண்மணி குதிரை முகத்தைவிட்ட காரணத்தினால் அவ்வூர் மாவிட்டபுரம் என்னும் பெயரைப் பெற்றது.

---

## 4. சுசங்கீதன்.

இராவணன் என்னும் பெயரையுடைய இராக்கதன் ஒருவன் இருந்தான். அவன் நெடுங் காலமாக இலங்கையிலிருந்து அரசாட்சி செய்து வந்தான். அந்த இராவணன் மகா சிவபக்தன். அவன் திரிகோணமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் தினந் தோறும் தரிசித்து வணங்கித் திருச்சந்நிதானத்தில் வீணை வாசித்து வந்தான்.

சுசங்கீதன் என்னும் கந்தருவன் ஒருவன் அவ் வீணையைக் கண்டு விரும்பி, அதனை அபகரித்துக் கொள்வதற்குக் காலம் பார்த்துக்கொண்டிருந் தான். சிலகாலம் செல்ல இராமபிரானுக்கும் இராவணனுக்கும் யுத்தம் உண்டாயது. அப்போரில் இராமபிரான் இராவணனுடைய புயங்களை வெட்டி னார். அவன் கையில் வைத்திருந்த வீணை நழுவி நிலத்தில் விழுவதற்கு முன், கந்தருவன் மன மகிழ்ச்சியுடன் அந்த வீணையை எடுத்துக் கொண்டான்.

பின்னர் அந்தக் கந்தருவன் பூமியிலுள்ள அதிசயங்களைப் பார்க்க விரும்பி, மனிதவடிவோடு எங்கும் உலாவி வீணையை வாசித்துக்கொண்டு

திரிந்தான். ஒருநாள் கீரிமலைக்கு வந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து நகுலாம்பிகையோடு எழுந்தருளியிருக்கும் நகுலேசுவரரைப் பக்தியோடு பூசித்தான். பின் பலதோத்திரங்களை வீணையில் அமைத்துப் பாடினன்.

சிவபெருமான் கந்தருவனுடைய வீணைப் பாடலில் மகிழ்ந்து "சுசங்கீதனே! உன்னுடைய பாடலில் பிரீதி அடைந்தோம்; நீ எப்பொழுதும் வீணையைக் கையில் வைத்திருப்பதால் உனக்குஇன்று முதல் யாழ்ப்பாணி என்னும் பெயராகும்; இம்மணற்றிடலில் பல புண்ணிய தலங்கள் இருள்செறிந்த காடுகளால் மூடப்பட்டிருக்கின்றன; நல்லதினத்தில் காட்டை வெட்டி நாடாக்குதி; உனக்கு நன்மை சித்திக்கும்" என்று சொல்லி மறைந்தருளினர்.

சுசங்கீதன் நகுலேசுரருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு சென்று, காடுகளை வெட்டுவித்து ஒரு நகரத்தை உண்டாக்கி அதற்கு யாழ்ப்பாணம் என்று பெயர் வைத்தான் பலசாதிச் சனங்களைக் குடியேற்றினன். அழிந்த ஆலயங்களைத் திருத்திக் கும்பாபிஷேகம், பூசை, திருவிழா முதலியவைகளைச் செய்வித்தான் சுசங்கீதனுடைய புகழ் எங்கும் பரவியது. சிவபெருமானுடைய திருவருளினலே அவன் இங்கே பெரும்போகங்களை அனுபவித்துக் கொண்டிருந்து இறுதியில் கந்தருவ உலகத்தை அடைந்தான்.

---

## 5. இராவணன் கோணேசரிடம் சிவலிங்கம் பெற்றது.

கைகசி என்பவள் விசிரவா என்பவனுடைய மனைவி. இவள் எப்போதும் அரிசிமாவினாற் சிவலிங்கம் உண்டாக்கிச் சிவபூசை செய்து வந்தாள். இச்செயலை இவளுடைய புத்திரனாகிய இராவணன் கண்டான். அவன் பரமசிவனிடத்திலே ஒரு சிவலிங்கத்தைப் பெற்றுத் தனது தாய்க்குக் கொடுக்க விரும்பினான் அதற்காக அவன் திரிகோணமலைக்குப் போனான். அங்கே போய், "சிவலிங்கம் தந்தருளுக" என்று சிவபெருமானைப் பிரார்த்தித்தான்.

சிவபெருமான் இலிங்கத்தைக் கொடுத்தருளவில்லை. இராவணன் கோபங்கொண்டு வாளை எடுத்துச் சுழற்றித், திரிகோணமாமலையின் தென்மேற்குத் திக்கிற்போய், அந்தப்பக்கத்தை வாளால் வெட்டிக் கையினால் அசைத்தான். மலையில் அசைவுண்டாயது. அதனைத் தேவதேவராகிய சிவபெருமான் பார்த்துத், தமது காற்பெருவிரலினால் அம்மலையினைச் சிறிது ஊன்றினார். மலையினது கனத்தினால் இராவணன் சரீரமுழுதும் காயமடைந்து இரத்தம் பெருகியோட துக்கத்தோடும் மலையின் கீழ் வீழ்ந்து பக்கத்திலுள்ள சமுத்திரத்தில் முழுகினான். முழுகிய இராவணன் எழுந்து யாழை வாசித்துச் சிவபெருமானை மகிழ்வித்தான். சிவபெருமான் திருநந்திதேவரைக்கொண்டு இராவணனை அழைப்பித்து ஒரு சிவலிங்கத்தை அவன் கையிற் கொடுத்தார்.

இராவணன் இலிங்கத்தைப் பெற்றுக்கொண்டு, கோணேசரையும் அம்பிகையையும் அன்பினோடு வணங்கித் தன் ஊருக்குப் போனான். போகும் வழியில், விட்டுணு ஒரு பிராமண வேடங்கொண்டு அவனுக்குப் பின்னே சென்றார். இராவணன் அவரைப் பார்த்து "நீர் எவ்விடம் போகிறீர்?" என்றான். அவர் "நான் இலங்காபுரியிலிருந்து சிவ பெருமானை வணங்கும் பொருட்டு வருகிறேன்" என்றார்.

இராவணன் "இலங்காபுரியில் விசேடம் என்ன?" என்று அவரைக் கேட்டான். பிராமணர் "உனது தாய் இறந்து விட்டாள்; அரக்கர் எல்லாம் அழுகின்றார்கள்" என்றார். அதனைக் கேட்டவுடன் இராவணன் அதிகந் துக்கமடைந்து பூமியில் விழுந்து அழுது புலம்பினான். அப்பொழுது பிராமணனாக வந்த விட்டுணு "கையில் இலிங்கத்தை வைத்துக் கொண்டு அழாதே" என்றார். இராவணன் சிவ லிங்கத்தை அவரிடம் கொடுத்தான். அவர் அந்தச் சிவலிங்கத்தைத் திரிகோணமலையின் தென்மேற்குத் திசையில் வைத்தார்.

பின்பு, இராவணன் விட்டுணுவினது கட்டளையின்படி ஏழுதீர்த்தங்களை உண்டாக்கினான். அவை குளிர்ச்சி, சமகுளிர்ச்சி, பெருஞ்சூடு முதலிய எழு வகையான குணங்களையுடையனவாம். அவற்றின் கரையிலே இராவணன் தாயினுடைய மரணக் கிரியைகளை விட்டுணுவாகிய பிராமணரைக் குருவாக வைத்துச் செய்தான். பிராமணர் மறைந்தார்.

இராவணன் கோணேசரை வணங்கி "அடியார்களுக்கு விரும்பியவைகளைக் கொடுப்பவரே! என்னுடைய மாதாவுக்கு முத்திதந்தருளுக; என்னிடம் கிருபைசெய்தருளுக" என்று பிரார்த்தித்துத் தனது நகரத்தை நோக்கிச் சென்றான்.

---

## 6. சிவபுராணங் கேட்டல்.

சாலுவதேசத்திலே, சிறீமுகன் என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நல்லொழுக்கமும் சிவனிடத்து அன்பும் நிறைந்தவர்களாகிய புத்திரர் எட்டுப்பேர் இருந்தார்கள். அந்தப் பிள்ளைகளை வறுமை மிகவும் வாட்டியது. அவர்கள் வருந்தியவர்களாய்ப் பிச்சை எடுத்துச் சீவனஞ் செய்துகொண்டு திரிந்தார்கள்.

ஒருநாள், அவர்கள் கல்வி அறிவு முதலியவற்றில் சிறப்புற்றோங்கிய சிதேந்திரியர் என்னும் முனிவரைக் கண்டு வணங்கி நின்று, "சுவாமீ! அடியேங்கள் வறுமைப் பிணியினால் வருந்துகின்றோம்; எங்களுக்கு மேலான ஒரு வழியை உபதேசித்தருளுக" என்று வேண்டினார்கள் சிதேந்திரிய முனிவர் அவர்களை நோக்கி "எங்கள் நகரத்துக்கு அயலிலுள்ள நகரத்திலே கலிசித்து என்னும் பிராமணர் இருக்கின்றார். அவர் எப்பொழுதும் சிவபூசை செய்பவர். சிவபுராணங்களை அடியார்களுக்குப் போதிப்பவர்; நீங்கள் அவரிடம் போய்ப் புராணங்களை முறைப்படி கேளுங்கள்; அந்தப் புண்ணியத்தி

னாலே நன்மைகளை அடைவீர்கள்" என்று சொல்லி யருளினார்.

பிராமணப் பிள்ளைகள் எண்மரும் அவரிடத்தே விடைபெற்றுக்கொண்டு, கலிசித்து என்பவரை அடைந்து வணங்கினார்கள். கலிசித்து அவர்களை "இருங்கள்" என்று சொல்லித் தமது முன்னிலையில் இருத்தினார். சிவபுராணங் கேட்பவர்கள், கலிசித்துவினுடைய சபையில் இருந்தார்கள். கலிசித்து புராண சரித்திரங்களைப் போதித்தார். எட்டுப் பேரும் புராணங்கேட்கும் பொழுது வெற்றிலை பாக்கு உண்ணுதல், சிரித்தல், வீண்வார்த்தை பேசுதல் முதலிய குற்றங்களைச் செய்யாது சுத்தியோடும் பக்தியோடும் கிரமமாகக் கேட்டார்கள். கலிசித்து அவர்கள்மீது அருள்வைத்துப் புராணோபதேசம் செய்துகொண்டு வந்தார்.

சிவபுராண சரித்திரங்களை நியமமாகக் கேட்ட சிவபுண்ணியத்தினால் புதல்வர்கள் எண்மரும் தாங்கள் நினைத்த கருமங்களை எல்லாம் கைகூடப் பெற்றார்கள். தேகம் நீங்கிய பின்னர் மோட்சம் அடைந்தார்கள்.

புராணங்களைப் படித்தலும் கேட்டலும் மிக மேலாகிய புண்ணியங்களாம்.

## 7. திருநந்தனவனம் வைத்தல்.

முன்னொருகாலத்திலே, சோபனன் என்னும் பெயருடைய பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் வறுமையினுலே வருந்தித் தான் இருந்த நகரத்தின் வீடுகள்தோறும் இரந்து திரிந்தான். ஒருநாள் அவன் யாசிக்கும்படி வேறொரு பட்டினத்துக்குச் சென்றுன். செல்லுகின்ற வழியிலே நான்கு வேதங்களையும் அறிந்த ஒரு சிவாசாரியர் வந்தார். சோபனன் அந்தச் சிவாசாரியரை வணங்கி நின்றுன். இதற்கிடையில் மழை பெய்தது. அவர்கள் இருவரும் மழைக்கொதுங்கி ஒரு வீட்டின் வாசலிற் போய் நின்றுர்கள்.

சோபனன் ஆசாரியரை வணங்கி, "சுவாமி! அடியேன் தரித்திரத்தினுல் வருந்துகின்றேன்; யான் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடையும்படி தேவரீரே ஒரு வழியைக் கூறுதல் வேண்டும்" என்றுன். ஆசாரியர் அதனைக் கேட்டு, "அன்பனே! சிவபெருமானுக்காகத் திருநந்தவனம் வைத்தல், பூக்களை விதிப்படி கொய்தல், அவற்றை இறைவனுருக்குச் சாத்துவித்தல் ஆகிய சிவபுண்ணியங்களைச் செய்வாயாயின், துன்பம் நீங்கி நற்கதி அடைவாய்" என்று உபதேசித்தார்.

சோபனன் சிவாசாரியருடைய கட்டளையின்படி பூமரங்களை உண்டாக்கினுன். அவை வளர்ந்து புஷ்பித்தன. அவன் தினந்தோறும் ஸ்நானம் பண்ணி விபூதிதரித்து மல்லிகை, முல்லை, வெட்சி

அலரி முதலிய பூக்களைக் கொய்து சிவபெருமானுக்குச் சாத்தும்படி கொடுத்து வந்தான்.

பிராமணன் இவ்வாறு கொடுத்து வருங்காலத்திலே, தேவராசனாகிய இந்திரன் ஒருநாள் அவனுக்கு வெளிப்பட்டு அமுதத்தையும் பொருட்குவியலையும் கொடுத்தான். குபேரனும் சிவபெருமானுடைய திருவருளினாலே அவனுக்குச் செல்வத்தைக் கொடுத்தான். சோபனன் அவைகளைப் பெற்று வறுமை நீங்கி இனிது வாழ்ந்து சுவர்க்கலோகத்தை அடைந்தான்.

அவன் சுவர்க்கத்திலுள்ள செல்வங்களை அனுபவித்தபின்னர், திருக்கைலாசமலையிற் சென்று பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தான்.

---

## 8. மார்க்கண்டேய முனிவர்.

முற்காலத்தில், மிருகண்டு என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் புத்திரபாக்கியத்தை விரும்பிக் காசியை அடைந்து, சிவபெருமானைச் சிந்தித்து அருந்தவஞ் செய்தார். பரமசிவன் அத்தவத்திற்கு மகிழ்ந்து தோன்றியருளினார். மிருகண்டு முனிவர் எழுந்து வணங்கி நின்றார். சிவபெருமான் "அன்பனே! உனக்கு யாது வரம் வேண்டும்?" என்று வினவியருளினார். முனிவர் "சுவாமீ! எனக்கு ஒரு புத்திரனைத் தந்தருளுதல் வேண்டும்" என்று வணக்கத்துடன் கூறினார். சிவபெருமான் "பதினாறு வயசுமாத்திரம் பெற்றவனாய்

எம்மிடத்து அன்புடையவனுயுள்ள சற்புத்திரனை உனக்குத் தந்தோம்" என்று சொல்லி மறைந்தருளினர். அத்திருவாக்கைக் கேட்ட மிருகண்டு முனிவர் சந்தோஷங்கொண்டார். உலகமுய்ய அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெயர் மார்க்கண்டேயர்.

மார்க்கண்டேயர் சிறுவயசிலேயே பல நூல்களையுங் கற்றறிந்தார். பரமசிவனிடத்தில் பேரன்புடையவராய் அவரை வழிபட்டுவந்தார். மார்க்கண்டேயருக்குப் பதினறுவயசு வந்தது. அதனை அறிந்த அவருடைய பிதாவும் மாதாவும் கவலைகொண்டார்கள்.

அதனை அறிந்த மார்க்கண்டேயர் "நீங்கள் வருந்தவேண்டாம்; யான் யமனை வென்று வருவேன்" என்று தமது தந்தை தாயரைத் தேற்றினர். பின்பு மார்க்கண்டேயர் காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாத சுவாமியை வலஞ்செய்து வணங்கி, ஒரு சிவலிங்கம் தாபித்துப் பூசித்தார். பரமசிவன் தோன்றி, "நீ யமனுக்கு அஞ்சாதே! அஞ்சாதே!!" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

மார்க்கண்டேயர் பூசைசெய்துகொண்டிருந்தார் இருக்கும்பொழுது, அவருடைய முன்னிலையில் யமன் தோன்றி, "நீர் எனது உலகத்துக்கு வரவேண்டும்" என்று கேட்டான். முனிவர் அவனைப்பார்த்து "உனது உலகத்துக்குச் சிவனடியார்கள் வாரார்கள்; திருக்கைலாசமலைக்கே செல்லுவார்கள்" என்று சொன்னர். இயமன் கோபித்துப் பாசத்தை

வீசி அவரை ஈர்த்தான். அப்பொழுது முனிவர் சிறிதேனும் மனங்கலங்காது சிவபெருமானைத் துதித்தார். சிவபெருமான் "மைந்தனே! இயமனுக்கு அஞ்ஞாதே! அஞ்சாதே!!" என்று சொல்லிக் கொண்டு தோன்றியருளினர். இயமனை நோக்கிக் கோபித்துத் தமது ஒரு திருவடியினாலே அவனைச் சிறிது உதைத்தார். இயமன் நிலத்திலே விழுந்து இறந்தான். மார்க்கண்டேயர் தமது எட்டுறுப்பும் நிலத்திலே பொருந்தும்படி சிவபெருமானை வணங்கினர். சிவபெருமான் முனிவரைநோக்கி "அன்பனே! உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்" என்று கூறி மறைந்தருளினர்.

மார்க்கண்டேயர் தந்தை தாயரை அடைந்து வணங்கி, நடந்தவைகளை அவர்களுக்கு விண்ணப்பித்தார். அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். மார்க்கண்டேயர் சிவாலய தரிசனம் செய்து கொண்டிருந்து சீவன் முத்தராயினர். இறைவனது கிருபையினுல் இயமன் உயிர்பெற்றெழுந்து, அவரைத் தியானித்துக்கொண்டு, தனது நகரத்தை அடைந்தான்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

தோடுலா மலர்கடூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநா ளணுகிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செலலுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினுர் காலன்மாளச் சாய்க்காடு மேவினுரே.

## 9. சைவசமயகுரவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும் சர்வான்மாக்களையும் உய்வித்தற்பொருட்டுத் தமிழ்வேதத்தைப் பாடியருளியும், அநேக அற்புதங்களைச் செய்தும் நமது சைவசமயமே மெய்ச்சமயம் என்று தாபித்தருளினர்கள். ஆகையினலே இந்த நான்கு மெய்யடியார்களும் சைவசமயகுரவர் என்றும், சைவ சமயாசாரியர் என்றும் பெயர் பெறுவார்கள்.

சைவசமயாசாரியர் நால்வருள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் மூவரும் தமிழ்வேதமாகிய தேவாரம் அருளிச்செய்தார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் தமிழ் வேதமாகிய திருவாசகத்தைப் பாடியருளினர். தேவாரதிருவாசகங்கள் சிவபெருமானுடைய திருவருளினலே பாடப்பட்டமையால் அருட்பாக்கள் எனப்படும். சமயாசாரியர்களை வழிபடுபவரும், தமிழ்வேதத்தை நியமமாக ஓதுபவர்களும் சிவபெருமானுடைய திருவடிக் கீழ்ப் பேரின்பத்தை அனுபவிப்பர்.

சைவசமயகுரவர் நால்வருக்கும் அவர்கள் முத்தியடைந்த தினங்களில் இயன்றமட்டும் குருபூசை செய்துகொண்டு வருவது ஆவசியமாகும்.



## 10. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

சமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சோழநாட்டிலுள்ள சீகாழி என்னுந் திருத்தலத்தில், வைதிகப் பிராமணகுலத்தில் கௌணியர் கோத்திரத்தில், திருவவதாரஞ் செய்தருளினார். இவருடைய தந்தையார் சிவபாத இருதயர் என்னும் சிவநேசச் செல்வர். இவருடைய தாயார் கற்பிற்சிறந்த பகவதியார் என்பவர். இவருக்கு ஆளுடைய பிள்ளையார், பாலறாவாயர், பரசமயகோளரி முதலிய திருநாமங்கள் உண்டு.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புறச்சமயங்களைக் கண்டித்து, சைவமயத்தைத் தாபனஞ்செய்தருளுமாறு அவதரித்தார். அவதரித்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகளிடத்துப் பல அற்புதங்கள் விளங்கின. இவர், உலகமாதாவாகிய உமாதேவியார் தம்முடைய திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து சிவஞானத்தைக் குழைத்து ஊட்டியருள உண்டார். சிவபெருமானிடத்திலே பஞ்சாக்ஷரம் எழுதப்பட்ட பொற்றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச்சின்னமும், முத்துக்குடையும், முத்துப்பந்தரும், பொன் உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றார். வேதாரணியம் என்னும் தலத்திலே வேதங்களினாலே பூசித்துப் பூட்டப்பட்டு, திருநாவுக்கரசுநாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடியருளினார். பாண்டியராசனுக்குக் கூனையும் சுரநோயையும் போக்கியருளினார். சமணர்கள் எதிரிலே,

தேவாரத்திருவேட்டைச் சுவாலித்து எரிகின்ற நெருப்பிலே போட்டுப் பச்சையாக எடுத்தருளினர். வைகையாற்றிலே திருவேட்டைப்போட்டு எதிரேறிச் செல்லும்படியும் செய்தருளினர் தம்மை எதிர்த்த புத்தநந்தி என்பவனுடைய தலையிலே இடி இடிக்கச் செய்தார். சிவனடியார் பொருட்டு ஆண் பனைகளைப் பெண்பனைகளாக்கிக் காய்க்குமாறு செய்தருளினர். சர்ப்பந்தீண்டி இறந்த வணிகனை அவனுடன் வந்த பெண்ணின் வேண்டுதலுக்கிரங்கி உயிர் பிழைக்கச் செய்தருளினர். விஷத்தினலே இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கி அருள்செய்தார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார், தமது திருக் கல்யாணத்துக்கு வந்தவர்களாகிய எல்லோரையும் முத்தியிற் கூட்டுவிக்கத் திருவுளங்கொண்டு, நமச் சிவாயத் திருப்பதிகத்தைத் திருநல்லூர்ப்பெருமண ஆலயத்தில் சிவபெருமானுடைய சந்நிதியிலே ஓதி ஞானசோதியிற் கலப்பித்தருளினர். பின்னர்த் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு, அச்சோதியுட்புகுந்து முத்தியடைந்தருளினர்.

திருஞானசம்பந்தசுவாமிகளது குருபூசைத் தினம் வைகாசிமாதத்துவரும் மூலநக்ஷத்திரமாகும்.

---

## 11. திருநாவுக்கரசுநாயனுர்.

சமயகுரவராகிய திருநாவுக்கரசுநாயனுர் திருமுனைப்பாடிநாட்டிலுள்ள திருவாமூர் என்னும் நகரத்திலே, வேளாளர் குலத்தில் சைவசமயம் விருத்தியாகும்படி அவதரித்தருளினுர். இவருடைய தந்தையார் புகழனுர் என்னும் பெரியார். தாயார் மாதினியார் என்பவர். இவருக்கு ஆளுடைய அரசு, வாகீசர், அப்பர், தாண்டகவேந்தர் முதலிய திருநாமங்களுமுண்டு.

திருநாவுக்கரசு நாயனுர் உழவாரப்படை நீங்காத திருக்கரத்தை யுடையவர். இடையருப் பேரன்புடையவர். ஆனந்தநீர் சொரியுங் கண்களை யுடையவர். சிவபெருமானுடைய திருவடிகளிலே பதித்த நெஞ்சை உடையவர். ஞானப்பாடல்கள் நீங்காத செவ்வாயையுடையவர். சிவவேடப் பொலி வழகையுடையவர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பல அற்புதங்களைச் செய்தருளினுர். சுவாமிகள் துஷ்டர்களாகிய சமணர்களாலே ஏழுநாள் சுண்ணும்பறையிலே பூட்டப்பட்டிருந்தும் ஒரு துன்புமின்றிப் பிழைத்தருளினுர். அச்சமணர்கள் கொடுத்த நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டும், நீலகண்டராகிய சிவபெருமானது திருவருளினுல் தாம் இறவாது பிழைத்தருளினுர். அவர்கள் யானையை ஏவிக் கொல்லும்படி விடுக்க, அந்த யானையினுல் வலஞ்செய்து வணங்கப் பெற்றுர். கொடிய சமணர்கள் கல்லிலே சேர்த்துக்

கயிற்றினலே கட்டிக் கடலிலே தள்ளிவிடவும் அக்கல்லே, தெப்பமாகக்கொண்டு கரையேறி யருளினர். சிவபெருமானிடத்திற் படிக்காசு பெற்ருர். வேதாரணியத்திலே வேதங்களாலே பூசித்துப் பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பதிகம் பாடியருளினர். விஷத்திஞல் இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தருளினர். காசிக்கு அப்பால் ஒரு தடாகத்தினுள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின்மேலே தோன்றிக் கரையேறினர். இந்த அற்புதங்களினலே சைவசமயமே மெய்ச் சமயம் என்று விளங்குகின்றது.

அன்பு வடிவான திருநாவுக்கரசு சுவாமிகள் பலதலங்களை வணங்கிக்கொண்டு திருப்புகலூரை அடைந்து, சுவாமி தரிசனம் செய்துகொண்டிருந் தார். ஒரு சித்திரை மாசத்திலே சதய நக்ஷத்திரத் திலே சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

---

## 12. சுந்தரமூர்த்தி நாயனர்.

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் திருப்பதி உள்ளது. அப்பதியில் சிவப்பிராமண குலத்தில் சடையனர் என்னும் சிவாசாரியர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியாராகிய இசை ஞானியாரிடத்திலே ஆன்மாக்கள் சைவசமயமே சற்சமயம் என்று உணர்ந்து அதன்வழி ஒழுகி உய்யும்பொருட்டு சுந்தரமூர்த்தி நாயனர் திரு அவதாரம் செய்தருளினர்.

இவர், பூமியிலே அவதரித்தற்கு முன், திருக்கைலாசத்தில் சிவபெருமானுடைய அடியார் கூட்டத்துள் ஒருவராய் ஆலால சுந்தரர் என்னும் திருநாமத்தோடு இருந்தவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நம்பியாரூரர், வன்றொண்டர், திருநாவலூரர் முதலிய திருநாமங்களுமுண்டு.

சுவாமிகள் ஒருதினம் திருப்புகலூரை அடைந்து சிவபெருமானை வணங்கித் திருக்கோயிலின் முன்றிலில் அடியார்களோடும் இருந்தருளினார். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே நித்திரை வந்தது. உடனே, அங்கே திருப்பணிக்காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து, உயரப்பண்ணி அதனையே தலையணையாகக் கொண்டு நித்திரை செய்தார். பின் விழித்தெழுந்து அந்தச் செங்கற்கள் எல்லாம் பொன்னாக இருக்கக் கண்டு, திருவருளைத் துதித்துப் பொற்குவையைப் பெற்றுக் கொண்டார்.

சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை நாயனார் விருத்தாசலத்தில் உள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்திலே எடுத்தார்.

இரு கரையும் அழித்து ஓடங்கள் செல்லாதபடி பெருகிய காவேரி ஆறு பிரிந்து வழிவிடச் செய்தார்.

முதலை விழுங்கிய பிராமணச் சிறுவனை அம்முதலைவாயினின்றும் அழைத்துக்கொடுத்தருளினார்.

இவ்வாறு பல அற்புதங்களைச் செய்தருளிய சமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவஞ்சைக் களத்துக்குப் போய்ச் சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து உள்ளே புகுந்து விழுந்து வணங்கினர். எழுந்து கைகள் சிரசிற் குவிய அடியேனைத் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருள வேண்டும் என்னும் குறிப்போடு திருப்பதிகம் பாடியருளினர். அப்பொழுது சிவபெருமானுடைய கட்டளையின்படி தேவர்கள் கொண்டுவந்த வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய குருபூசைத் தினம் ஆடிமாசத்துச் சுவாதி நக்ஷத்திரம்.

---

## 13. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் படிக்காசு பெற்றது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும், திருநாவுக்கரசு நாயனரும் திருவீழிமிழலை என்னும் தலத்திலே, சிவபெருமானை வணங்கித் துதித்துக்கொண்டு, அங்குள்ள திருமடங்களில் இருந்தார்கள். அவர்கள் அங்கே இருக்கும் நாளிலே, மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. அதனல் உயிர்கள் வருந்தின. சிவனடியார்களும் பசியினல் வருந்தினர்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் "விபூதி தரித்த சிவனடியார்களுக்குங்

கவலை வருமோ" என்றிரங்கி அன்றிரவு நித்திரை செய்தார்கள். சிவபெருமான் அவர்களுக்குக் கனவிலே தோன்றி "பஞ்சம் நீங்கும் வரையும் உங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொற்காசு தருவோம்" என்று சொல்லி மறைந்தருளினர்.

சிவபெருமான் தாம் அருளியபடி திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் இரு நாயனர் பொருட்டும் ஒவ்வொரு பொற்காசு வைத்தருளினர். அடியார்கள் இருவரும் கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கி பொற்காசுகளை எடுத்தார்கள். அமுது அமைக்கும் பரிசனர்கள் கடைக்குச் சென்று காசைக்கொடுத்துப் பண்டங்களை வாங்கி அமுது சமைப்பார்கள்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் கறிகள் நெய் தயிர் முதலியவற்றேடு அடியார்களுக்கு அன்னம் இட்டுக்கொண்டிருந்தார். திருநாவுக்கரசு சுவாமிகளும் அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்து வந்தார்.

சமயாசாரியர் இருவருடைய திருமடங்களிலும் நாடோறும் சிவனடியார்கள் வந்து போசனம் பண்ணினர்கள். அடியார்கள் போசனம் செய்து சந்தோஷமாக இருக்குங் காலத்தில் மழை பெய்தது. அதனல் நெல் முதலியவைகள் விளைந்தன. பஞ்சமும் நீங்கியது. நாயன்மார் இருவரும் பரமசிவனை வணங்கி அத்தலத்தை விட்டகன்று வேதாரணியம் எனப்படும் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினர்கள்.

---

## 14. பராசரமுனி குமாரர்.

பராசரர் என்னும் பெயரையுடைய ஒரு முனிவர் இருந்தார். அவருக்குத் தத்தன் முதலிய புதல்வர்கள் அறுவர் உளர். அவர்கள் ஒருதினம் சரவணம் என்னும் தடாகத்திலே முழுகி அந்நீரை அலைத்தார்கள். அப்பொழுது அத்தடாகத்திலுள்ள மீன்கள் நான்கு திசைகளிலும் ஓடின. அவர்கள் அதைக் கண்டு அம்மீன்களைப் பிடித்துக் கரையில் விடுத்து உலாவினார்கள். உலாவும்பொழுது, பராசர முனிவர் மத்தியான கருமம் செய்யும் பொருட்டு அங்கே வந்தார். வந்த அவர் தமது புத்திரர்களைப் பார்த்துக் கோபங் கொண்டு "பிள்ளைகளே! நீங்கள் இந்த எளிய தொழிலைச் செய்தமையால் மீன்களாகக் கடவீர்கள்" என்று சபித்தார். உடனே அவர்கள் மீன் வடிவமானார்கள். அம்மீன்கள் அளவற்ற காலம் சரவண தடாகத்திலே உலாவித் திரிந்தன.

சுப்பிரமணியக் கடவுள் அந்தச் சரவண தடாகத்திலே சிறுவராய் எழுந்தருளி இருந்தார் ஒருதினம் உமாதேவியார் அத்தடாகத்தில் வந்து தமது புத்திரராகிய சுப்பிரமணியக் கடவுளைத் தழுவினார். அப்பொழுது திருமுலைப்பால் பெருகிச் சரவண தடாகத்திலே பாய்ந்து சென்றது. பிதாவாகிய பராசர முனிவருடைய சாபத்தினாலே மீனாய்க் கிடந்த அறுவரும் அப்பாலை உண்டார்கள். அதனால், உடனே மீன் வடிவம் நீங்கிப், பழைய வடிவத்தைப் பொருந்தி எழுந்து சிவபெருமானை வணங்கினார்கள்.

சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் திருப்பரங்குன்றம் என்னும் தலத்திலே இருந்து தவஞ்செய்யுங்கள்; நம்முடைய குமாரனாகிய இவன் வந்து அருள்செய்வான்" என்று கூறியருளினார். முனி புத்திரர்கள் சிவபெருமானையும் உமாதேவி யாரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு திருப் பரங்குன்றத்திற் போய்த் தவஞ்செய்து கொண் டிருந்தார்கள். சுப்பிரமணியக் கடவுள் சூரசங்கா ரத்தின் பொருட்டுச் செல்லுவதைத் தவஞ்செய்து கொண்டிருந்த அவர்கள் அறுவரும் ஞானத்தினால் அறிந்து, அவருடைய திருச்சந்நிதானத்தை அடைந்து வணங்கி அவருடன் சென்றார்கள்.

குமாரசுவாமி சூரபதுமனைச் சங்காரஞ் செய்த பின், திருப்பரங்கிரியில் வந்து வீற்றிருந்தருளினார். பராசரமுனி குமாரர்கள் சுப்பிரமணியக் கடவுளைப் பூசித்து வணங்கி நின்று "தேவதேவரே! அடியேங் களுக்குத் திருவருள் செய்க" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். முருகக்கடவுள் அவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து முத்தி கொடுத்தருளினார்.

---

## 15. அகத்திய முனிவர்.

அகத்திய முனிவர் பொதியமலையில் வசித்தருளு பவர். சிவபெருமானிடத்தும் முருகப்பெருமானிடத் தும் தமிழ் மொழியைக் கற்றவர். அகத்தியம் என் னும் இலக்கண நூல் செய்தவர். தலைச் சங்கத்தி

லும் இடைச்சங்கத்திலும் வீற்றிருந்து தமிழா ராய்ந்த தலைமைப்புலவர். தொல்காப்பியர் முதலிய பன்னிருவருக்கும் தமிழாசிரியர். சமுத்திர நீரை உள்ளங்கையில் அடக்கி ஆசமித்தல் முதலிய அற்புதங்களைச் செய்தவர்.

ஒருநாள் அகத்திய முனிவர் மகாமேரு மலையி னின்று பொதியமலைக்குச் சென்றார். செல்லும் வழியிலே, திருக்குற்றாலம் என்னும் தலம் எதிர்ப்பட்டது. அத்தலத்தில் விஷ்ணுகோயில் ஒன்று உண்டு. முனிவர் அக்கோயிலின் வீதியைக் கடந்து சந்நிதா னத்தில் வந்தார். வருதலும், அவ்வாலயத்தில் இருந்த வைணவப் பிராமணர்கள், முனிவரை நோக்கிப் பகைவரைக் கண்டு பதைபதைப்பவர் போலக் கோபித்தார்கள். கோபங்கொண்ட வைண வர்கள் "தகாத ருத்திராக்ஷத்தையும் நீற்றையும் அணிந்திருக்கின்றாய்; அதனால் நீ உலகறியப் பிச்சை யேற்ற சிவனுக்கு அடியவன்; நீ இங்கே செல்லுதல் தகாது; எம்பெருமானுடைய திருக்கோயிலைக் கிட்டாது செல்லக் கடவாய்" என்று சொன்னார்கள்.

வைணவர்கள் அப்படிச் சொல்லுதலும், முனிவர் அதனைக் கேட்டுக் கோபமுறாது சிரித்து "வேத ஒழுக்கத்தை இகழ்கின்ற நீங்கள் இங்கே இருக்கின்றதை அறியேன்; இதனை எனக்கு ஒருவரும் சொன்னாரில்லை; இது நல்லவழி யென்று வந்தேன்; உம்முடைய தன்மையை அறிந்தால் நான் இவ் வூருக்குச் செல்ல நினையேன்; கோபிக்க வேண்டாம்; யான் மீண்டு செல்கின்றேன்" என்றார்.

அகத்திய முனிவர் இதனைச் சொல்லுதலும், வைணவர்கள் பின்னும் பொருது இகழ்ந்து "மீண்டு செல்லுதி" என்றார்கள். செந்தமிழ் முனிவர் "நீங்கள் உண்மையையே சொன்னீர்கள்" என்று சொல்லிச் சென்றார். செல்லும் முனிவர் உயிர்க்குயிராகிய சிவபெருமானை இகழ்கின்ற இந்த வைணவருடைய அகந்தையை வேரோடுங் களைவேன் என்று நினைத்து ஒரு விஷ்ணு பக்த வடிவங் கொண்டு மீண்டும் அங்கே சென்றார்.

அவரைக் கண்ட வைணவர்கள் எதிர்கொண்டு போற்றிப், பாதங்களிலே விழுந்து வணங்கினார்கள். அகத்திய முனிவர் இவ்வணக்கம் "நாராயணனுக்குப் பிரீதி ஆகுக" என்று கூறினார். பின்பு அவர்களை நோக்கி "உங்களிடத்தில் விட்டுணுவின்பாலுள்ள அன்புக்கு அளவில்லை என்று சொன்னார்கள்; அதைக்காணுமாறு வந்தோம்; உம்மைக் கண்டமையினால் யாமும் பேருணர்வு பெற்றோம்; இங்கே எம்பெருமான் இருக்கின்ற கோயில் உள்ளது என்றார்கள்; அது வணங்கும் விருப்புடையோம்" என்று கூறினார்.

அகத்திய முனிவர் இப்படிச் சொல்ல, அவர்கள் கைவிரலைச் சுட்டிக் காட்டி "இது விட்டுணு கோயில்" என்றார்கள். முனிவர் கை தொழுது கோயிலை அடைந்து வலம் வந்து வணங்கினார். பின்பு வைணவர்களை நோக்கி "இவரைப் பூசித்தற்காகிய உபகரணங்களைக் கொண்டு வாருங்கள்" என்றார். வைணவருட் சிலர் சென்று புஷ்பம் சந்தனம்

முதலிய பூசைத் திரவியங்களைக் கொண்டுவந்து முனிவருக்குமுன் வைத்தார்கள்.

முனிவர், "யான் இவரை அருச்சனை செய்யும் விதிமுறையைப் பாருங்கள்" என்று சிவபெருமானை மனதிலே தியானித்தார் தியானித்து விட்டுணுவினுடைய திருமுடியிலே தமது கையை வைத்துக் "குறுகு குறுகு" என்று இருத்திக் குழைவித்து, ஒரு சிவலிங்க வடிவாகச் செய்து தாபித்தார். பின்னர்த் தமது சுய ரூபத்தைக் கொண்டு பூசித்தார். வைணவர்கள் அதைக் கண்டு கோபித்து, "இவன் வடிவினுல் மிகக் குறியவன்; சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்புள்ளவன்; முன்னரே சைவ வேடத்தோடு இவ்விடத்தில்வந்தான்; நாம் தூஷிக்க இங்கே நில்லாது சென்று, ஒரு விட்டுணு பக்தனைப்போல இப்பொழுது வந்து நம் சமயத்தை அழித்தான்; இவனைப் பிடியுங்கள்" என்று அகத்திய முனிவரை வளைந்துகொண்டார்கள். முனிவர் பிடிக்க வளைகின்றவர்களை நெருப்பெழப் பார்த்துக் கோபித்தார். அவர்கள் முனிவரது கோபாக்கினிக்குப் பொருதவர்களாய்த் தமது ஊரைவிட்டுப் பூமியில் எங்கும் ஓடினுர்கள்.

அத்தலம் அன்று முதலாகச் சிவத்தலமாயிற்று. அகத்திய முனிவர் பரமசிவனைப் பூசித்து வணங்கிப் பொதிய மலையை யடைந்தார்.

## 16. ஆலய தரிசனம்.

சைவர்கள் தினந்தோறும் ஆசாரத்தோடு திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி தரிசனம் செய்தல் வேண்டும். ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக்கோயிலுக்குச் செல்லுதல் கூடாது.

கோயிலுக்குப் போகும்பொழுது வெறுங்கையுடனே போகாது, கர்ப்பூரம் தேங்காய் முதலிய யாதேனுங் கொண்டு செல்க. பொருள் இல்லாதவர் பத்திர புஷ்பங் கொடுத்து வணங்குக. அதுவுங் கூடாதவர் சந்நிதியில் உள்ள குப்பை முதலியவற்றைப் போக்கி வணங்கக் கடவர்.

ஆலயத்துக்குச் சமீபித்தவுடனே தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, கை குவித்து உள்ளாகப் புகுந்து பலிபீடத்துக்கு இப்பால் வணங்கக் கடவர். ஆடவர்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமுஞ் செய்தல் வேண்டும்.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கைகள் இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்பும் நிலத்திலே பொருந்த வணங்குதலாம்.

திரயாங்க நமஸ்காரம் ஆடவர் பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் பொது. திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தலாம்.

நமஸ்காரம் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் செய்க ஒருதரம் இருதரம் பணிந்து எழுதல் குற்றம்.

கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும் மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கே சிரசை வைத்து மார்பு நிலத்திலுற வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி, பின் அம் முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் பூமியிலே பொருந்தக் கைகளை அரையை நோக்க நீட்டி, வலக் கன்னத்தையும் இடக் கன்னத்தையும் தரையைத் தீண்டச் செறித்து நமஸ்காரம் பண்ணக் கடவர்.

தெற்கு நோக்கிய சந்நிதியிலும், வடக்கு நோக்கிய சந்நிதியிலும் கிழக்கே சிரசு வைத்து முன் போல நமஸ்கரிக்கக் கடவர்.

இவ்வகையாக வணக்கஞ் செய்து எழுந்து, கை குவித்துக் கொண்டு, சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அருட்பாக்களை மனங்கசியப் பாடிக், கால்களை மென்மெலவைத்துப் பிரதக்ஷிணம் செய்க. பிரதக்ஷிணமானது அடிமேல் அடி வைத்துச் செல்லுதல், இருகைகளையும் குவித்துக் கொள்ளுதல், வாயால் தோத்திரஞ்செய்தல், மனத்தால் சிவபெருமானைத் தியானித்தல் என்னும் நான்கு அங்கங்களுடன் கூடியதாம்.

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டு தரமும், உமாதேவியாரையும் விட்டுணுவையும் நந் நான்குதரமும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகருடைய திருமுன்னிலையில் நமஸ்காரம் செய்யும்பொழுது முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியில் மும்முறை குட்டிக் கொண்டு வலக்காதை இடக்கையினாலும் இடக் காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மும் முறை தாழ்ந்தெழுந்து நமஸ்காரம் பண்ணுக.

கொடிமரநிழலையும் தூபிநிழலையும் கடத்தல் கூடாது. பிரதக்ஷிணம் பண்ணும்பொழுது அந்த நிழலில் மூன்றுகூறு நீக்கி மற்றிரண்டு கூற்றிற் செல்லக்கடவர். பெருமான் உற்சவங் கொண்டருளும்போது அந்த நிழல் இருப்பினும் நீக்காது செல்லலாம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து, கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டல் ஆகாது.

சுவாமி சந்நிதானங்களைத் தரிசனம் செய்யுமிடத்து, முன்பு துவாரபாலகரை வணங்கிப், பின்பு திருநந்திதேவரை வணங்கித் துதித்துக்கொண்டு உள்ளேபோய், விநாயகருடைய சந்நிதியை அடைந்து தரிசனம் செய்க. பின்னர்த் தலைமி

லேனும் இருதயத்திலேனும் கைகளைக் கூப்பிக் கொண்டு சிவலிங்கப்பெருமானுடைய திருமுன் சென்று வணங்கித் தோத்திரஞ் செய்க. பின்பு உமாதேவியாருடைய சந்நிதியை அடைந்து வணங்கி, அதன்மேல் நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமயாசாரியர் நால்வரையும் வணங்குக. அதன்பின்பு சண்டேசுரர் சந்நிதியை அடைந்து மும்முறை கைகொட்டித் தரிசனபலத்தைத் தரும்படி பிரார்த்திக்க.

இவ்வாறு சண்டேசுரர்வரை நமஸ்காரஞ் செய்தபின் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை விழுந்து வணங்கித் திருவைந்தெழுத்தை இயன்றளவு செபித்து வீட்டுக்குச் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயில் வழிபாடு தினந்தோறும் செய்தற்கு இயலாதவர் திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், திருவாதிரை, சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

---

## 17. சிவபெருமான் தாயினும் நல்லவர்.

பல வளங்களும் நிறைந்த நகரங்களுள்ளே சிறந்தது காவிரிப்பூம்பட்டணம். அப்பட்டணத்திலே அரதனபாலன் என்னும் ஒரு வணிகர் திலகன் இருந்தான். அவன் தன் மனைவியுடன் வாழ

நாளிலே, பிள்ளைப்பேற்றை விரும்பிச் சிவபெருமானைப் பூசித்து வந்தான். அப்பூசாபலத்தினாலே, உத்தம குணங்கள் நிறைந்த ஒரு சற்புத்திரியைப் பெற்றான். அக்குழந்தைக்கு அரதனவதி என்று சுற்றத்தார்கள் பெயர் வைத்தார்கள். அரதனவதி வளர்ந்து தக்க பருவம் அடைந்தாள். திரிசிராப்பள்ளியில் வசித்த தனகுத்தன் என்னும் ஒரு வணிகன் அவளை விவாகஞ்செய்து இல்லறத்தை நடாத்தி வாழ்ந்திருந்தான்.

சிலகாலம் சென்றபின்பு, மருமகனாகிய தனகுத்தன், மனைவியோடு தனது நகரத்துக்குச் செல்லுதல் வேண்டும் என்று மாமனாகிய அரதனபாலனுக்கு அறிவித்தான். மாமன் இரத்தினம் முதலிய பொருள்களைக் கொடுத்துச் "செல்வீர்களாக" என்று அனுமதிகொடுத்து அனுப்பினான். தனகுத்தனும் அரதனவதியும் திரிசிராப்பள்ளியை அடைந்து சிவபுண்ணியங்களைச் செய்திருந்தார்கள். அரதனவதி நாயகனுடைய கட்டளைப்படி திரிசிராமலையில் எழுந்தருளியிருக்கும் செவ்வந்திநாதரையும் அம்மையாரையும் வணங்கி வெள்ளிக்கிழமை விரதத்தை அநுட்டித்து வந்தாள்.

இவர் இருவரும் இப்படி இருக்குநாளிலே, காவிரிப்பூம்பட்டணத்திலிருந்த அரதனபாலன் தேகவியோகமாயினான். சுற்றத்தார்கள் தனகுத்தனுக்கும் அவன் மனைவிக்கும் அறிவித்தார்கள். அவர்கள் அறிந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி, காவிரிப்பூம்பட்டணத்தை அடைந்தார்கள். தன

குத்தன் மாமனுடைய ஈமக்கடன்களையும் மற்றைய கிரியைகளையும் செய்து முடித்தான். பின்பு, மனைவியுடன் திரிசிராவை அடைந்து சிவவிரதங்களை அனுட்டித்தல், விருந்தினரை உபசரித்தல் முதலிய பல தருமங்களைச் செய்திருந்தான்.

இருக்குநாளிலே, மனைவி வயிற்றிலே ஒரு கருப்பம் உண்டாயிற்று. ஒன்பது மாசங்கள் நிறைந்தன. காவிரிப்பூம்பட்டணத்திலிருந்த தாயும் தன் மகளுடைய செயலை அறியவேண்டும் என்று நினைத்தாள். மழை அதிகமாகப் பெய்து பொன்னி நதி பெருக்கெடுத்துச் சென்றது. ஆறு பாயுந்தடையினால், தாய் மகளிடம் வரமுடியவில்லை. அரதனவதி அதனை அறியாதவளாய், எனது அன்னை பிரசவத்துக்குரிய பொருள்களைக்கொண்டு இன்று வருவார்; நாளை வருவார் என்று பலவாறாக நினைத்தாள்.

அரதனவதி இப்படி நினைக்கும் சமயத்தில், திரிசிராமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அவளுடைய தாயைப்போல முதுகில் நரைத்த கூந்தல் பொருந்தவும், மூங்கிற்றண்டு திருக்கரத்தில் விளங்கவும், திருமுகம் அசையவும், நெற்றியில் வெயர்வைதுளிக்கவும், இளைப்புத்தோன்றவும், நெடு மூச்செறியவும் நின்று நின்று சென்றருளினார். பல பண்டங்களை இருபெண்கள் சுமந்துகொண்டு அவருக்குப்பின்னே சென்றார்கள். அவர் தூரத்தில் வருவதைக்கண்ட அரதனவதி, அவரைத் தனது மாதா என்று துணிந்தாள். சமீபித்தவுடன்

எதிர்சென்று இரண்டு பாதங்களிலும் விழுந்து வணங்கினுள். மாதாவாக வந்த சிவபெருமான் அவளை இருகரங்களாலும் தழுவி அருள் மொழிகளைக் கூறி ஆசனத்தில் இருந்தார். அரதனவதி பண்டங் களைக் கொண்டுவந்த பெண்களைப் போசனஞ் செய் வித்தாள்.

மற்றைநாள், அரதனவதி வயிறுநொந்து வருந் தினுள். தாயாகிய சிவபெருமான் அவளை எடுத் தணைத்து முதிர்ந்த அன்பினுல் மருத்துவத்தொழில் கள் எல்லாவற்றையுஞ் செய்தார். அப்பெண் ஒரு ஆண் குழந்தையைப் பெற்ருள். பிரசவித்த அம்மக ளுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களை எல்லாம் செய்தார். அக்குழந்தையை ஒருமாசம் வரையும் வளர்த்தார்.

ஆற்றுப்பெருக்கு வற்றியது. முன்னர் ஆற்றுப் பெருக்கினுல் தடைப்பட்டிருந்த தாய் தன் மகளின் செயலை அறியும்படி வந்தாள். தனது மாமி இல்லத் தில் வருவதைத் தனது தந்தனுங் கண்டான். இவ்விரு வரில் அன்னியர் யாவரோ என்று நினைத்தான். முன்னர் வந்த தாயாகிய சிவபெருமான் பிரசவ அறையுள் இருந்தார். பின்னர் வந்த தாய் பிரசவ அறையுட் புகுந்து, அவருக்கு எதிர்முகமாக இருந் தாள். அரதனவதி அதிசயங்கொண்டு, எனது தாய் இவர்களுள் யார் என்று மயங்கிச் சமீபித்தாள். முன்னர்த்தாயாக வந்த சிவபெருமான் மின்னலைப் போலத் திருக்கோயிலினுள்ளே மறைந்தருளினர்.

அடியார்க்கெளியராய் வந்தருளும் சிவபெருமானை உலகத்தார் அனைவரும் "தாயினும் நல்லவர்; நல்லவர்" என்று சொல்லி வணங்கினார்கள். தனகுத்தனும் மனைவியும் தாயுமானேசுரரை அனுதினமும் பணிந்து சிவலோகத்தை அடைந்தனர்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

தாயுமா யெனக்கேதலை கண்ணுமாய்ப்
பேயனே னையுமாண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனாரென நம்வினை நாசமே.



## 18. பழநி.

பிரமா சத்திய உலகத்திலே உள்ள சபாமண்டபத்தில் வீற்றிருந்தார். நாரதமுனிவர் அச்சபையிற் போய் யாழைக் கையிலெடுத்துச் சிவபெருமானுடைய தோத்திரங்களை அமைத்துப் பாடினூர். பிரமதேவர் தலைகளை அசைத்து ஒரு மாம்பழத்தை அவர் கையிற் கொடுத்தார். நாரதர் அதை ஏற்று "இது சிவபெருமானுக்கு ஆகும்" என்று கூறிப் பிரமாவிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றூர். சென்ற முனிவர், திருக்கைலாசமலையை அடைந்து சிவபெருமானுடைய திருமுன்னிலையில் அப் பழத்தை வைத்து வணங்கினூர்.

பரமசிவன் நாரதருக்கு நல்லருள் செய்து, மாம் பழத்தைத் தமது திருக்கரத்தில் எடுத்துக் குமாரக் கடவுளையும் விநாயகக் கடவுளையும் திருநோக்கம் செய்தருளினூர். அவர்கள் அப்பழத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டினூர்கள். சிவபெருமான் "ஒரு கணத்தில் பூமியை வலம் வருபவருக்கே இப் பழம் கிடைக்கும்" என்று கூறியருளினூர். குமாரக் கடவுள் மயில் வாகனத்தின் மீதேறி, உலகை வலம் வருவதற்கு முன், விநாயகக் கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வலம் வந்து வணங்கி "எல்லா உலகங்களிலும் அவ்வுலகங்களில் வசிக்கும் பலவகைப்பட்ட உயிர்களிலும் ஒன்றி நிறைந்து ஓங்கி விளங்கும் பரஞ்சுடர் தேவரீரன்றே? தேவரீர் அல்லாத வேருெரு பொருள் இருக்கின்றதா? தேவரீரை வலம் வந்தது உலகை வலம் வந்ததனூடு

ஒக்கும்" என்று கூறினர். உடனே பரமசிவன் அக்கனியை விநாயகருக்குக் கொடுத்தருளினர்.

சுப்பிரமணியக் கடவுள் ஒரு நொடியில் உலகை வலம் வந்து சிவ சந்நிதானத்தை அடைந்தார். விநாயகருடைய திருக்கரத்தில் மாம்பழம் இருப்பதைக் கண்டார். பிணக்குற்றூர் போல மகுடம் முதலிய ஆபரணங்களையும் ஆயுதங்களையும் நீக்கி, ஒரு தண்டத்தைத் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு திருவாவினன்குடிக்குப் போய்ச், சிவகிரியில் வீற்றிருந்தார். திருவாவினன்குடியில் அரிய தவஞ் செய்துகொண்டிருந்த இலக்குமி தேவிக்கும் காமதேனுவுக்கும் சூரியனுக்கும் அவருடைய திருவுருவைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது. குமாரசுவாமி அங்கே பல திருவிளையாடல்களைச் செய்துகொண்டிருந்தார்.

சிவபெருமானும் உமா தேவியாரும், ஒரு தினம் திருவாவினன்குடியிலுள்ள திருக்கோயிலினுள்ளாகச் சென்றருளினர். சுப்பிரமணியக்கடவுள் தமது தந்தையையும் தாயையும் வணங்கினர். சிவபெருமான் அவரைத் தமது இருகரங்களாலும் எடுத்துத் திருமார்புடன் அணைத்து உச்சிமோந்து உமா தேவியாருடைய திருக்கரத்திற் கொடுத்தருளினர். அம்மையார் திருப்புன்முறுவல் செய்து, "முருகா! எம்மிடத்து வருக; அருட்கடலில் விளைந்த முத்தே வருக; திருவாவினன் குடியில் திருவே வருக" என்று வாரி எடுத்துத் தோள்மேல் அணைத்துச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் கொடுத்தருளினர்.

பரமசிவன் அவரைத் தமது திருமடியில் வைத்து "நீ என்றும் இளமையுடையாய்; எல்லா அறிவும் உள்ளாய்; மாங்கனியும் ஒரு கனியோ? நீயே பேரின்பச் சுவையை இடைவிடாது கொடுக்கும் சிவஞானப் பழமாகும்; அங்ஙனமுள்ள பழநீ யாகவும் உனக்கு வேறு பழமும் வேண்டுமோ?" என்று கூறியருளினர். முருகக் கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூசித்து வணங்கினர்.

பரமசிவனும் தேவியாரும் "பழநீ" என்று திருவாய்மலர்ந்தமையால் திருவாவினன்குடி அன்று தொட்டுப் பழநி எனப் பெயர் பெற்றது. கந்தசுவாமியும் பழநியாண்டவர் எனப் பெயர் பெற்றார்.

---

## 19. ஆப்பு சிவலிங்கமானது.

மதுரை நகரத்திலே, சோழாந்தகன் என்னும் பாண்டியன் ஒருவன் இருந்தான். அவன் தனது பிரசைகளின் பொருட்டே எந்தக் கருமத்தையுஞ் செய்பவன். சிவபக்தி நிறைந்தவன். தினந்தோறும் சிவலிங்க தரிசனஞ் செய்தே போசனஞ் செய்யும் நியமம் உள்ளவன். இந்த நியமத்திலிருந்து ஒருநாளுந் தவறாதவன்.

ஒருநாள் அந்தப் பாண்டியராசன் தனது பரிசனங்களுடன் மிருகவேட்டையைக் குறித்துக் காட்டுக்குப் போனான். அக்காட்டில் நெடுநேரம்

வேட்டையாடினன். பசியும், தாகமும், வேட்டையாடிய இளைப்பும் மிகுந்து, ஒரு மரநிழலிலே படுத்திருந்தான். மந்திரிமார்கள் பாண்டியனை நோக்கி, "அரசர் பெருமானே! நீர் வேட்டையாடிக் களைத்துவிட்டீர்; சிறிது போசனஞ் செய்தால் உமது களைப்பு நீங்கிவிடும்" என்றார்கள். அரசன் அவர்களை நோக்கி "மந்திரிகளே! யான் சிவலிங்க தரிசனம் செய்யாமல் போசனஞ் செய்யும் வழக்கம் இதுவரையும் இல்லை; என்னுடைய உயிருக்கு இறுதி வந்தாலும் இந்த விரதத்தை விடமாட்டேன்" என்று கூறினன்.

அரசனுடைய மனவுறுதியை அமைச்சர்கள் அறிந்து ஓரிடத்திலே கூடி "நமது அரசன் இந்த வனத்தில் சிவலிங்க தரிசனம் செய்வது எப்படி முடியும்? அவர் தமது விரதத்தைப் பங்கஞ் செய்ய மாட்டார்; சிறிது நேரத்துள் அவருடைய உயிர் உடம்பை விட்டு நீங்கினாலும் நீங்கும்; நாம் ஒரு உபாயத்தினல் அரசனுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று முடிவு செய்தார்கள்.

அவர்கள் தாம் நிச்சயித்தபடி ஒரு கொன்றை மரத்தடியிலே மணலைக் குவித்துத் தண்ணீர் தெளித்து ஒரு ஆப்பை அடித்தார்கள். அதன் மேல் ஆடை, ஆபரணம், மாலை, சந்தனம் முதலியன சாத்தி அலங்கரித்தார்கள். அந்த முளையானது பார்ப்பவர்களுக்குச் சிவலிங்கம் போல விளங்கியது.

பின்பு மந்திரிமார் அரசனை அடைந்து "இந்த வனத்திலே ஒரு கொன்றை மரத்தடியில் சிவலிங்கம் இருக்கின்றது" என்று சொன்னார்கள் அரசன் அதைக் கேட்டுச் சந்தோஷமெய்தினான். மந்திரி மார் சிவலிங்கத்தைத் தரிசிப்பிக்கும் பொருட்டு அரசனை அழைத்துக் கொண்டு சென்றார்கள். சிவ பத்தியிற் சிறந்த பாண்டியன், அவர்களுடன் போய்ச் சிவலிங்கப் பெருமான் இவரே என்னும் மெய்ஞ்ஞானக் கருத்தோடு தரிசித்தான். தரிசனம் முடிந்தவுடன் அமைச்சர்கள் அவனுக்கு உணவு கொடுத்தார்கள். அரசன் உண்டு பசியும் களைப்பும் நீங்கினான்.

பின்னர் அரசன் அமைச்சர்களை நோக்கி "இந்தச் சிவலிங்கப் பெருமானுக்கு ஒரு திருக் கோயில் உண்டாக்க வேண்டும்; இந்தக் காட்டையும் வெட்டி நாடாக்க வேண்டும்" என்று கூறினான். அதைக் கேட்ட மந்திரிகள் நாம் செய்த சூழ்ச்சி அரசனுக்குத் தெரிந்துவிடுமே என்று பயந்து ஓடி மறைந்திருந்தார்கள். அரசன் சிவலிங்கத்தைப் பார்த்தான். அது ஆப்பாக இருத்தலைக் கண்டு "இப்பாவிகள் எனது விரதத்தைக் கெடுத்து விட்டார்களே" என்று சொல்லி வருந்தினான்.

வருந்திய அரசன் "கிருபாமூர்த்தியே! அடியேன் இன்றுவரை என்னுடைய நியமத்தைத் தவறாது முடித்துள்ளேனாயின், இந்த ஆப்பானது சிவலிங்க ரூபமாக விளங்குதல் வேண்டும்; அப்படி இல்லையேல் இப்பொழுதே உயிர் துறப்பேன்"

என்று சிவபெருமானை நோக்கி முறையிட்டான். உடனே சிவபெருமானுடைய திருவருளினலே அந்த ஆப்பானது சிவலிங்க ரூபமாயது. அரசன் அது கண்டு ஆனந்தக் கூத்தாடிச் சிவபெருமானைத் துதித்தான். மந்திரிமார் இதனை அறிந்து அரசனுக்குச் சமீபமாக வந்து சேர்ந்து கொண்டார்கள்.

சோழாந்தக பாண்டியன் காட்டை வெட்டுவித்து நாடாக்கித் திருக்கோயிலையும் அமைப்பித்தான். அவ்வூருக்குத் திருவாப்பனூர் என்று பெயர் வைத்தான். பற்பல சாதிகளையும் குடியேற்றினான். திருக்கோயிலிலே நித்திய பூசை, திருவிழா முதலிய வைகளைச் சைவாகம முறைப்படி செய்வித்தான். அவனுடைய பெருமை நாடு முழுவதும் பரவியது. அவன் குடிகளுக்கு இன்பம் பெருக அரசாட்சி செய்து இனிதாக வாழ்ந்திருந்து முத்தியடைந்தான்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்.

முற்றுஞ் சடைமுடிமேல் முதிரா விளம்பிறையன்
ஒற்றைப் படவரவமுது கொண்டரைக் கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைப்பற் றறுப்பாரே.

## 20. சங்கரபண்டிதர்.

யாழ்ப்பாணத்தில் பலவளங்களாலும் சிறந்த சுன்னுகம் என்னும் ஓரூருண்டு. அவ்வூரில் சைவ வேளாளர் குலத்தில் சிவகுருநாதபிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் நீர்வேலியில் இருந்த அருணசலம் பிள்ளை என்பவரின் புத்திரி யாகிய தெய்வயானை என்பவர். இவ்விருவரும் இல்லறம் நடாத்திவரும் நாளில் ஒரு புத்திரரைப் பெற்றெடுத்தார்கள். இவரே சங்கர பண்டிதர் என்னும் அறிஞர்.

இவர், உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்யப்பெற்றார். இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களை மகாவித்துவானயிருந்த சேனதிராச முதலியாரிடத்தும் கந்தரோடை அப்பாபிள்ளை உபாத்தியாயரிடத்தும், முறையாகக் கற்றார். இந்தியாவுக்குப்போய், அங்கேயிருந்த சிறந்த கல்விமான்கள் சிலரிடத்தில் சம்ஸ்கிருத நூல்களையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் இனிது படித்தார். இவ்வாறு கிரமமாகப் படித்த இவர், சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் சிறந்த கல்விமானய் விளங்கினர். இவருடைய கல்வித் திறமையை நோக்கி அறிஞர்கள் எல்லோரும் இவரைப் பண்டிதர் என்று பாராட்டுவர்.

பழைய நூல்களைச் சுத்தமாக ஏடுகளில் எழுதுதலும், புதிய நூல்களை இயற்றுதலும், மாணக்கர்களுக்குப் படிப்பித்தலும் பண்டிதருக்கு இடையறு

முயற்சியாயிருந்தன. இவர், கமத்தொழிலிலும் விருப்பமுடையவராய் அதனையும் செய்வித்து வந்தார்.

சங்கரபண்டிதரிடம் படித்தோரும் சந்தேகங்களைக் கேட்டுத்தெளிந்தோரும் மிகப்பலர். கீரிமலைச் சபாபதிக் குருக்கள், சுன்னுகம் முருகேச பண்டிதர், கோப்பாய்ச் சபாபதிநாவலர். இவரது புத்திரராகிய சிவப்பிரகாச பண்டிதர் முதலியோர் இவருடைய மாணுக்கர்களாவர்

பண்டிதர் பலருக்கும் உபயோகமாகும்படி அநேக நூல்கள் செய்திருக்கிருர். இவர் விவேகமும் அவதானமுமாகிய இரண்டும் விசேஷமாக உடையவர். அன்பு அருள் அடக்கம் முதலிய நற்குணங்கள் எல்லாம் நிரம்பப்பெற்றவர். சமயாசாரங்களைக் கிரமமாக அநுட்டித்து வந்தவர். சிவபூசையை ஒழுங்காகச் செய்து வந்தவர்.

இவருடைய காலத்திலே பாதிரிமார்கள் தமது கிறிஸ்துமதத்தைப் பரப்பி வந்தார்கள். இவர் பற்பல பாதிரிமாரோடுஞ் சமயவாதஞ் செய்து வென்று வந்தார். கிறிஸ்துமதகண்டனத்திலும் சைவசமயத் தாபனத்திலும் ஆறுமுகநாவலருக்குத் துணையாயிருந்தார். மிலேச்சமதவிகற்பம், சிறிஸ்துமத கண்டனம் முதலிய நூல்களையுஞ் செய்தார்.

சங்கரபண்டிதர் பிரசங்கஞ் செய்வதிலும் தமக்குப் பிறரொருவரும் இணையில்லாதவர். இவரால் யாழ்ப்பாணத்தில் பலப்பல இடங்களிலும்,

இந்தியாவில் வேதாரணியம் சிதம்பரம் முதலிய இடங்களிலும் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. இவருடைய பிரசங்கமாரியினுல் சைவப்பயிர் தழைத்தோங்கியது.

பண்டிதர் தாம் செய்த நூல்களை அச்சிட விரும்பிச் சென்னைக்குச் சென்ருர். சென்றபோது கோயமுத்தூரில் இருந்து நாகலிங்கசுவாமி என்பவருக்குத் தருக்கம் படிப்பித்துக்கொண்டிருந்தார். இருக்கும் நாளிலே சிவபெருமானுடைய பாதநீழலை அடைந்தார். அப்போது இவருக்கு வயசு நாற்பத்திரண்டே.

---

# தோத்திரத்திரட்டு

## தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

### பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு
பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக
மாயவன் வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற்
றானடி காண்போம்.

பொடி - திருநீறு. விடை - இடபம். புடை - பக்கம். கொடியுடை ஊர் - கொடிகட்டப்பட்ட ஊர். ஐயங்கொண்டு - பிச்சையை ஏற்று. வடிவுடை - அழகினையுடைய. வான் நெடு - ஒளிபொருந்திய நீண்ட. பாகம் ஆயவன் - இடப் பாகத்திற் பெற்றவர். வாழ்கொளிபுத்தூர் - ஒருதலம். கடி - வாசனை. கறை - நஞ்சு.

### பண் - காந்தாரம்.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே.

வேதத்தில் உள்ளது - வேதத்தில் பேசப்பட்டுள்ளது "விபூதியில்லாத நெற்றியைக் கொளுத்துக" என்பது முதலியன வேதவாக்கியங்கள். வெந்துயர் - கொடிய பிறவித் துயரம். போதம் - சிவஞானம். புன்மை - உடம்பின்கண் ஏற்படும் அசுத்தமாகிய புன்மைகளும், உயிரைப்பற்றியுள்ள ஆணவமலப்புன்மையும். ஓதல் - படித்தறிதல். உண்மை - உண்மை நூல்கள்.

இத்திருப்பதிகம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூன்பாண்டியரது சுரநோயைத்தீர்க்கும் பொருட்டு மதுரையிற் பாடியருளியதாம்.

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

### பண் - காந்தாரபஞ்சமம்.

துஞ்ச லுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

துஞ்சலும் - இறக்கும்போதும். நெஞ்சகம் - மனம். நைந்து - கசிந்து. வஞ்சகம் - கபடம். அடி - திருப்பாதம். கூற்று - யமன். ஐந்தெழுத்து - ஸ்ரீ பஞ்சாக்ஷரம். மனச்சுத்தியோடு சிவபூசை செய்த மார்க்கண்டேயர்மேல் வந்த யமனை உதைத்து அருள்செய்த செய்தி ஈண்டுக்கூறப்பட்டது.

நாயனாருக்கு உபநயனப்பருவம் வந்தபோது அவர் பிதாவாகிய சிவபாதஇருதயர் முதலிய வைதிக சைவப் பிராமணோத்தமர்கள் அவருக்கு உபநயனஞ் செய்வித்து நான்கு வேதங்களையுந் தந்தோமென்று வேதமந்திரங்களைச் சொல்ல, நாயனார் அவர்களுக்கு வேதங்களையெல்லாம் எடுத்

துச் சொல்லி, அவர்களுக்குள்ள சந்தேகங்களையெல்லாம் நீக்கி எல்லா மந்திரங்களுக்கும் மூலமாயுள்ளது பஞ்சாட்சரமே யென்று விளக்கி இத்திருப்பதிகத்தை யருளினர்.

## திருநாவுக்கரசு நாயனர்

### திருநேரிசை.

தழைத்ததோ ராத்தியின் கீழ்த்தா பர
　　மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக்
　　கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப்
　　பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார்
　　குறுக்கை வீரட்டனரே.

ஆத்தி - ஆத்திமரம். தாபரம் - சிவன் திருமேனி ஆவின்பால் - பசுவின்பால் தாதை - பிதா. அமுதம் - (இறந்தலையும் பிறத்தலையும் இல்லாமற்செய்யும்) முத்தி. குறுக்கை வீரட்டம் - ஒருதலம். இங்கே சண்டேசுர நாயனர் சிவபூசை செய்தமை குறிக்கப்பட்டது.

### திருத்தாண்டகம்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சேநீவா
　　நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப்
　　பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
　　சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
　　ஆரூரா வென்றென்றே யலறுநில்லே.

*நிலைபெறுமாறு எண்ணுதியேல் - அழியாது நிலைபெறும் வழியை எண்ணுவாயாகில். கோயில்புக்கு - ஆலயத்துக்குப் போய். ஆரூரா - திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் கடவுளே. அலறு - கதறு. இங்கே அலகிடுதல் முதலிய தொண்டுகளைக் கோயிலில் செய்யுமாறு உபதேசம் செய்யப் கின்றது.*

## சுந்தரமூர்த்தி நாயனார்

### பண் - நட்டபாடை.

*கொன்று செய்த கொடுமையாற்பல சொல்லவே*
*நின்ற பாவ வினைகடாம்பல நீங்கவே*
*சென்று சென்று தொழுமின்றேவர் பிரானிடங்*
*கன்றினோடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே.*

*கொன்றுசெய்த - பிறவுயிரை வதைத்துச் செய்த. பல சொல்ல - உலகத்தார் பலவிதமாக இழித்துச் சொல்லும்படி. நின்ற - பொருந்திய. நீங்க - நீங்கும்படி. தேவர்பிரான் இடம்- தேவர்பிரானாகிய சிவனது இடமாகிய. பிடி - பெண்யானைகள். சென்று சென்று - பலதரம் சென்று. தொழுமின் - வணங் குங்கள்.*

## மழபாடி

### பண் - நட்டராகம்.

*பொன்னார் மேனியனே*
*புலித்தோலை யரைக்கசைத்து*
*மின்னார் செஞ்சடைமேல்*
*மிளிர்கொன்றை யணிந்தவனே*

மன்னே மாமணியே
மழபாடியுண் மாணிக்கமே
அன்னே உன்னையல்லா
லினியாரை நினைக்கேனே.

பொன் ஆர் மேனியன் - பொன்போன்ற திருமேனியை யுடையவர். அசைத்து - கட்டி. மன்னே - தலைவரே. மழபாடி - ஒருதலம்.

திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசயபோற்றி யென்னுங்
கைதா னெகிழவி டேனுடையா
யென்னைக் கண்டுகொள்ளே.

மெய் - தேகம். விதிர்த்தல் - நடுங்குதல். கழல் - திருவடி. தவிர்ந்து - நீங்கி. கை - ஒழுக்கம். உடையாய் - என்னை அடிமையாகவுடையவரே.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கு மியல்பானன் சாழலோ.

பூண்பது - தரிப்பது அரவம் - சர்ப்பம். மறை - வேதம். சாழல் - ஒருவகை விளையாட்டு.

### திருவிசைப்பா.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலமா டரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

விளக்கு - தீபம். அளி - அன்பு. உகந்தாயை - விரும்பிச் செய்யும் தேவரீரை.

### சேக்கிழார்

### பெரியபுராணம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

நிலவு - சந்திரன். நீர் - கங்கை. வேணியன் - சடையை யுடையவர். அலகில் - அளவுபடாத.

### கச்சியப்ப சிவாசாரியர்

### கந்தபுராணம்.

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

தந்த - படைத்த. நான்முகத்தேவு - நான்கு முகங்களையுடைய பிரமா. துணைவி - சத்தி. நலம் - நன்மை, வாணி - சரசுவதி. அடி - பாதம். போற்றுவாம் - வணங்குவாம்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.

மலிவளம் - சிறந்த வளம். மன்னன் - அரசன். கோன்முறை - செங்கோல் முறைப்படி. நான்மறை - நான்குவேதங்கள். அறங்கள் - தருமங்கள்.

## அருணகிரிநாத சுவாமிகள்

### திருப்புகழ்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே.

ஏறுமயில் - ஆண்மயில். ஈசன் - சிவபெருமான். தீர்க்கும் - நீக்கியருளுகின்ற. குன்று - கிரௌஞ்சமலை. பொருள் - மெய்ப்பொருள். அருணசலம் - திருவண்ணாமலை.